DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 788/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 3 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 11.03.2026.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தளி காவல் நிலையத்தில் செட்டில் மெண்ட் தனி பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் காவலராக பணியில் இருந்த போது கடந்த 23.03.2019 சின்ன வீரன் பட்டியின் கிராம நிர்வாக அலுவலர் தேர்தல் சட்ட விதிகளுக்கு மாறாக உடுமலை – தாராபுரம் ரோட்டில் சித்தக்குட்டை ரோட்டில் சண்முக பிரியா மில் சேர்ந்த காங்கிரஷ் கட்சி பொறுப்பாளர் சுமார் 20 அடி நீளமுள்ள கட்சி கொடி பறப்பதாகவும், அது அகற்றப்படாமல் உள்ளதாகவும் புகார் கொடுத்தார். அந்த கொடி கம்பத்தை ஏற்கனேவே காங்கிரஷ் கட்சி பொறுப்பாளர் ஜெய்பிரகாஷ் என்பவரிடம் சொல்லியும் அவர் அகற்றாததால் நானும், தலைமை காவலர் ஜெய்கணேஷ் இருவரும் காவல் ஆய்வாளர் ஓம் பிரகாஷ் என்பவருடம் சம்பவ இடம் சென்று பார்த்தோம். அப்போது காங்கிரஸ் கட்சி கொடி கொடி கம்பத்தில் பறக்கவிட்டது தெரியவந்தது. அது மெயின் ரோட்டை ஒட்டி தார் சாலை முடியும் மண் சாலை

தொடங்கும் இடத்தில் நடப்பட்டிருந்தது.

2. பின்னர் அந்த கொடிக்கம்பத்தை போடிப்பட்டி மணி நகரை சேர்ந்த காங்கிரஷ் கட்சி பொறுப்பாளர் ஜெய்பிரகாஷ் தான் நட்டிருந்தார் என்று தெரியவந்தது. பின்னர் அந்த கொடி கம்பத்தை அகற்றி காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். பொது ஜன சாட்சிகள் இல்லாத காரணத்தினால் நானும் காவலர் ஜெய்கணேஷ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். காவல் ஆய்வாளர் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு சம்பந்தமாக சொல்லிகொடிக்கம்பம் என்ன கலர் என்று நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். காங்கிரஸ் கட்சி பொறுப்பாளர் யார் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் ப பெயர் சொன்னார்கள் பொறுப்பாளர் யார் என்று பார்க்கவில்லை. ஆஜர் எதிரி என்ன கட்சியில் உள்ளார் என்ற விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் காங்கிரஸ் கட்சி என்று சொன்னார்கள். ஆஜர் எதி இந்த வழக்கு சம்பந்தமாக தற்போது சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக வழக்கு ஆரம்பித்த காலத்திலிருந்து நீங்கள் பார்த்ததில்லை என்ற என்றால் சரிதான். வரைபடம் எதுவும் வரையவில்லை என்றால் வரைபடம் வரைந்தார்கள்.
2. வரைபடத்தில் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால் இல்லை. கொடி கம்பம் அகற்றியதாக சொல்லப்பட்ட நிலையில் மண்ணில் நடப்பட்ட கொடி கம்பமா அல்லது சிமெண்ட் கலவையில் போடப்பட்ட கொடிக்கம்பமாக என நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கட்சி பொறுப்பாளர்கள் யார் சென்று சொல்லி அகற்றக் கூறினார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் ஆமாம். நீங்கள் காவல் ஆய்வாளர் மொத்தம் எத்தனை பேர் அங்கு சென்றீர்கள் என்றால் நானும் தலைமை காவலர் ஜெயகணேஷ் காவல் ஆய்வாளர் ஓம் பிரகாஷ் ஆகியோர்கள் சென்றோம்.
3. கொடி கம்பம் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் தான் இன்று வரை உள்ளது என்றால் தற்போது உள்ளதா என்று தெரியவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட பகுதியில் இருந்து அந்த கொடி கம்பத்தை எப்பொழுது காவல் நிலையம் கொண்டு வந்தார்கள் என்று தெரியாது என்றால் அன்றைய தினமே அகற்றிக் கொண்டு வந்து விட்டோம். நீங்கள் கையெழுத்து போட்டது காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போடப்பட்டது என்றால் இல்லை.
4. உங்களிடம் கையெழுத்து வாங்கியது டைப் செய்த பேப்பரை கையால்

எழுதப்பட்ட பேப்பரா என்றால்_டைப் செய்த ஆவணம், சாட்சி பின்னிட்டு கையால் எழுதியதாக கூறுகிறார். நீங்கள் மட்டும் தான் அங்கு கையெழுத்து போட்டீர்கள் என்றால் தலைமை காவலர் ஜெயகணேஷ் என்பவரும் போட்டார். இல் என்ன எழுதியிருந்த விபரம் தெரியாது என்றால் ஞாபகமில்லை., காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சிய் அளிக்கிறிர்கள் என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் எதிரி ஆரம்பம் முதல் பரம்பரையாக கம்யூனிஸ்ட் கட்சியில் தொழிற் சங்கத்தில் இருப்பவர் என்றாலும் காங்கிரஸ் கட்சியில் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.